சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் 22.08.2025

வா.சா.1 – பொன்னுச்சாமி S/o.சின்னன்

O.S. No.2/2024

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை :

வழக்கு சொத்து புஞ்சை நிலம் ஆகும். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சீயந்தான்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். வாதிகள் அனைவரும் விவசாய கூலி வேலை தான் செய்துவருகிறார்கள். முருகேசன் 4ம் வாதி வெளிநாட்டில் இருக்கிறார். வழக்கு சொத்து தவிர வேறு எதுவும் நிலங்கள் இருக்கிறதா என்றால் வயல் இருக்கிறது. 6ம் வாதி என்னுடைய தாயார். 5ம் வாதி பஞ்சு என் உடன்பிறந்த தங்கை. 1ம் வாதி சிட்டுகத்தி என் உடன்பிறந்த அக்கா. 3ம் வாதி மூக்கம்மாள் என் உடன்பிறந்த தங்கை. 4ம் வாதி முருகேசன் என் உடன்பிறந்த தம்பி ஆவார். வழக்கு சொத்திற்கு சுற்றி உள்ள 3 இடங்களும் பிரதிவாதியின் இடம் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு தென்புறத்தில் ஆறு என்றால் சரிதான். வழக்கு சொத்தை என் தந்தை சின்னனிடம் ஒத்திக்கு பிரதிவாதி எடுத்ததாக சொன்னார்கள். சொத்து சுவாதீனம் என்பது பிரதிவாதியிடம் தான் இருக்கிறது என்றால் சரியல்ல. என்னிடம் தான் உள்ளது. இதுவரை எங்கள் அனுபவத்தில் தான் சொத்து உள்ளது. 2023ம் ஆண்டு 02 வது மாதம் 08ம் தேதி என் தந்தை சின்னன் காலமாகிவிட்டார். அதன்பிறகு வழக்கு சொத்தை JCB கொண்டு சுத்தம் செய்தார்கள். அப்போது விசாரிக்கும் போது தான் வழக்கு சொத்தை பிரதிவாதிக்கு ஒத்திக்கு கொடுத்ததாக சொன்னார்கள். நான் 2-3 நாள் கழித்து EC போட்டு பார்த்த போது 20 வருடம் ஒத்தி என் தந்தை சின்னன், பிரதிவாதி ராஜ்குமாருக்கு போட்டது

தெரியவந்தது. 2 ஒத்திகளை பற்றி எனது முதல் அறிவிப்பில் ஏன் குறிப்பிடவில்லை என்றால் சொல்லியிருக்கிறோம். மேற்படி ஒத்திகள் 2ம் பதிவு செய்யப்பட்ட ஒத்தி என்றால் சரிதான்.. ஒத்திபத்திரமான வா.சா.ஆ-2 மற்றும் 3ஐ நான் படித்து பார்த்திருக்கிறேன். வா.சா.ஆ-2 ஒத்திபத்திரத்தில் 4ம் பக்கத்தில் 20வருடத்திற்கு பிறகு ஒத்தி தொகை ரூபாய் 1 லட்சத்தை செலுத்த தவறிவிட்டால் சொத்தின் சுவாதினத்தை ஒத்தி தொகை வசூலிக்கப்படும் வரை பிரதிவாதியே அனுபவித்து கொள்ள வேண்டியதுஎன்று கண்டுள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாது. வா.சா.ஆ-3 ஒத்திபத்திரத்தில் 5ம் தாளில் 30வருட தவணை முடிந்ததும் ஒத்திதொகையை செலுத்த தவறினால் சொத்தை பணம் செலுத்தும்வரை பிரதிவாதி ராஜ்குமாரே அனுபவித்து கொள்ள வேண்டியதுஎன்று கண்டுள்ளது என்றால் நான் படிக்கவில்லை என்பதால் எனக்கு தெரியவில்லை. மேற்படி வா.சா.ஆ.2 மற்றும் 3 பத்திரங்களை வழக்கறிஞர் படித்து சொன்னாரா என்றால் சொன்னார். பொதுவாக பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் உண்மையான பத்திரங்கள் என்ற அனுமானம் சட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். பத்திரத்தில் சொல்லியுள்ளது போல வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களை பொறுத்து எங்களுக்கு எந்த உரிமையும் சொத்தின் சுவாதீனத்தை கேட்கோ, அதிகாரத்தை கேட்கவோ உரிமை இல்லை என்றால் சரியல்ல. 35 வருடங்கள் கழித்து தான் ஒத்தியை சுவாதினத்தை கேட்பதற்கு எங்களுக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. ஒத்தி என்பது 2-3 ஆண்டுகளுக்கு மட்டும் தான் உரியது. 35 வருடங்களுக்கு கிடையாது. அவ்வாறு 2-3 ஆண்டுகளுக்கு ஒத்தி எடுத்திருந்தால் பதிவு செய்யும் போதே 2-3 ஆண்டுகளுக்கு மட்டும் ஒத்தி பதிவுசெய்யபட்டடிருக்கும் என்றால் சரியல்ல. சுற்றிலும் பிரதிவாதிக்குரிய சொத்து இருப்பதால் சொத்தை அபகரிக்கப்பதற்காக தான் பதிந்துள்ளார். வழக்கு சொத்து சின்னகாளை என்ற நபருக்கு அடமானம் வைத்திருந்தது உண்மை தான். சின்னகாளை

பெயரில் உள்ள ஒத்திதொகையை பிரதிவாதி ராஜ்குமார் தான் செலுத்தி மீட்டிருக்கிறார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நீதிமன்றத்தில் ஒத்திக்கான தொகையை செலுத்தி ரசீது பெற்றுள்ளோமா என்றால் கட்டியிருக்கிறோம். தொகை செலுத்தியது ரூ.2,25,000 ம் பற்றி என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, வழக்குரையிலோ குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. தற்போது இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்கு எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. என் தந்தை தொகையை வாங்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஒத்திபத்திரத்தில் என் தந்தை கையெழுத்திட்டுள்ளார். ஆனால் வா.சா.ஆ.3 ஆவணத்தில் கைரேகைவைக்கப்பட்டுள்ளது . அவர் எவ்வாறு அழைத்து சென்றார் என்பது தெரியவில்லை அவர் நடக்கமுடியாதவர் வீடடிலேயேஇருந்தவர் எவ்வாறு அழைத்து செல்லப்பட்டார் என்பது தெரியவில்லை. என் வீட்டில் தான் என் தந்தை வசித்து வந்தார். என் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.08.22 17:34:34 +0530

Sub Judge

Melur